ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2194/55 - 2020 සැප්තැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.09.24

*2194/55 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### சப்பிரகமுவ மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185(3)(அ)(i) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154(இ) ஆம் யாப்பின் மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அத்துடன், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185(2) ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், சப்பிரகமுவ மாகாண சபையின் ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஆகிய நான், கேகாலை மாவட்டத்தின் மாவனெல்லை பிரதேச சபையின் தவிசாளரான திரு. ஹந்துன்குட்டி பேடிகே சந்தன குமார ஜயவந்தல அவர்கள் மேற்கூறிய பதவியில் பணிபுரிகையில், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் எதுவும் செய்துள்ளாரா என்பது தொடர்பில், இந்த அறிவித்தல் கொடுக்கப்படும் திகதியிலிருந்து மூன்று மாத கால எல்லைக்குள் விசாரணை செய்து அறிக்கையிடுவதற்காக, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிவான் திரு. ஹேரத் முதியன்சேலாகே ரோஹண அநுர குமார அவர்களை நியமனம் செய்கின்றேன்.

இந்த ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிவான் அவர்களுக்கு, இந்த விசாரணை தொடர்பாக விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட ஆணைக்குழுவொன்றின் அதிகாரங்கள் இருக்கும்.

**டிக்கிரி கொப்பேகடுவ,**
சப்பிரகமுவ மாகாண ஆளுநர்.

சப்பிரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகம்,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2020, செத்தெம்பர் 24.

10-346